ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.7 – திருவுக்கும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.7 – திருவுக்கும்

‡ திருவுக்கும் திரு ஆகிய செல்வா ! ⋆
தெய்வத்துக்கரசே ! செய்ய கண்ணா ! ⋆
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே ! ⋆
உலகுண்ட ஒருவா ! திருமார்பா ! ⋆
ஒருவற்காற்றி உய்யும் வகை என்றால் ⋆
உடன் நின்றைவர் என்னுள் புகுந்து ⋆
ஒழியாதருவித் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.1** ॥

பந்தார் மெல் விரல் நல் வளைத் தோளி ⋆
பாவை பூமகள் தன்னொடும் உடனே வந்தாய் ⋆
என் மனத்தே மன்னி நின்றாய் ⋆
மால் வண்ணா ! மழை போல் ஒளி வண்ணா ⋆
சந்தோகா ! பௌழியா ! தைத்திரியா ! ⋆
சாம வேதியனே ! நெடுமாலே ⋆
அந்தோ ! நின்னடி அன்றி மற்றறியேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.2** ॥

நெய் ஆர் ஆழியும் சங்கமும் ஏந்தும் ⋆
நீண்ட தோள் உடையாய் ⋆
அடியேனைச் செய்யாத உலகத்திடைச் செய்தாய் ⋆
சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து ⋆
பொய்யால் ஐவர் என் மெய் குடி ஏறிப் ⋆

போற்றி வாழ்வதற்கஞ்சி நின் அடைந்தேன் ⋆
ஐயா ! நின்னடி அன்றி மற்றறியேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.3** ॥

பரனே ! பஞ்சவன் பௌழியன் சோழன் ⋆
பார் மன்னர் மன்னர் தாம் பணிந்தேத்தும் வரனே ! ⋆
மாதவனே ! மதுசூதா ! ⋆
மற்றோர் நல் துணை நின் அலால் இலேன் காண் ⋆
நரனே ! நாரணனே ! திருநறையூர் நம்பீ ! ⋆
எம் பெருமான் ! உம்பர் ஆளும் அரனே ⋆
ஆதிவராகம் முன் ஆனாய் ! ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.4** ॥

விண்டான் விண் புக வெஞ்சமத்தரியாய்ப் ⋆
பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து ⋆
பண்டான் உய்ய ஓர் மால்வரை ஏந்தும் ⋆
பண்பாளா ! பரனே ! பவித்திரனே ⋆
கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை ⋆
கருமம் ஆவதும் என் தனக்கறிந்தேன் ⋆
அண்டா ! நின்னடி அன்றி மற்றறியேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.5** ॥

தோயா இன் தயிர் நெய் அமுதுண்ணச் ⋆
சொன்னார் சொல்லி நகும் பரிசே ⋆
பெற்ற தாயால் ஆப்புண்டிருந்தழுதேங்கும் தாடாளா ! ⋆
தரையோர்க்கும் விண்ணோர்க்கும் சேயாய் ⋆
கிரேத திரேத துவாபர கலியுகம் ⋆
இவை நான்கும் முன் ஆனாய் ⋆

ஆயா ! நின்னடி அன்றி மற்றறியேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.6** ‖

கறுத்துக் கஞ்சனை அஞ்ச முனிந்தாய் ! ⋆
கார் வண்ணா ! கடல் போல் ஒளி வண்ணா ⋆
இறுத்திட்டான் விடை ஏழும் முன் வென்றாய் ! ⋆
எந்தாய் ! அந்தரம் ஏழு முன் ஆனாய் ⋆
பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப் ⋆
போகமே நுகர்வான் புகுந்து ⋆
ஐவர் அறுத்துத் தின்றிட அஞ்சி நின் அடைந்தேன் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.7** ‖

நெடியானே ! கடி ஆர் கலி நம்பீ ! ⋆
நின்னையே நினைந்திங்கிருப்பேனைக் ⋆
கடி ஆர் காளையர் ஐவர் புகுந்து ⋆
காவல் செய்த அக்காவலைப் பிழைத்து ⋆
குடி போந்துன் அடிக் கீழ் வந்து புகுந்தேன் ⋆
கூறை சோறிவை தந்தெனக்கருளி ⋆
அடியேனைப் பணி ஆண்டு கொள் எந்தாய் ! ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ‖ **7.7.8** ‖

கோவாய் ஐவர் என் மெய் குடி ஏறிக் ⋆
கூறை சோறிவை தா என்று குமைத்துப் போகார் ⋆
நான் அவரைப் பொறுக்ககிலேன் ⋆
புனிதா ! புட்கொடியாய் ! நெடுமாலே ⋆
தீ வாய் நாகணையில் துயில்வானே ! ⋆
திருமாலே ! இனிச் செய்வதொன்றறியேன் ⋆

ஆ ! ஆ ! என்றடியேற்கிறை இரங்காய் ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! ॥ **7.7.9** ॥

‡ அன்ன மன்னு பைம் பூம் பொழில் சூழ்ந்த ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானை ⋆
கன்னி மன்னு திண்தோள் கலிகன்றி ⋆
ஆலி நாடன் மங்கைக் குல வேந்தன் ⋆
சொன்ன இன் தமிழ் நன்மணிக் கோவை ⋆
தூய மாலை இவை பத்தும் வல்லார் ⋆
மன்னி மன்னவராய் உலகாண்டு ⋆
மான வெண் குடைக்கீழ் மகிழ்வாரே ॥ **7.7.10** ॥

அடிவரவு — திருவுக்கும் பந்தார் நெய் பரனே விண்டான் தோயா கறுத்து நெடியானே கோவாய் அன்னம் செங்கமலம்

திருவுக்கும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்